# கிழக்கில் ரெலோவால் கைதுசெய்யப்படும் தமிழர்

## ராணுவத்திடம் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் ரெலோ குழுவினரின் காட்டிக் கொடுப்பு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இவர்கள் தமிழ் கிராமங்களை சுற்றிவளைத்து தமிழரைப் பிடித்துச் சென்று சிறிலங்கா இராணுவத்திடம் ஒப்படைத்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பேத்தாலை, வாழைச்சேனை ஆகிய இடங்களை சுற்றிவளைத்த ரெலோ இயக்கத்தினர் ஐந்து ஆண்களைக் கைதுசெய்து வாழைச்சேனை இராணுவ முகாமில் கொண்டு சென்று ஒப்படைத்துள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தில் கந்தசாமி ஜெயசிங்கம் (வயது 16), சின்னத்தம்பி (வயது 13) முத்துக்குமார் இருஷ்ண

(4 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 மார்கழி (17 - 12 - 1990) திங்கட்கிழமை ஓசை 292

## யாழ். பாடசாலைகளுக்கு 50 கோடிக்குமேல் சேதம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு ஐம்பதுகோடி ரூபாய்க்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தகவலை யாழ். கல்வித்திணைக்களம் வெளியிட்டுள்ளது. கல்வித்திணைக்களத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற புள்ளி விபரங்களின்படி யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை தொடர்பாக இந்தியா

# புதிய வெளியுறவுக் கொள்கை

# இந்தியபடை இலங்கை வராது

## இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்ளா அறிவிப்பு

(டில்லி)

இலங்கை தொடர்பாக நான்கு அம்சங்களை உள்ளடக்கிய புதிய வெளியுறவுக் கொள்கை ஒன்றை திரு. சந்திரசேகரின் அமைச்சரவை வகுத்துள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்ளா நேற்றுபுதுடில்லியில் தெரிவித்தார்.

அரசாங்கக் கட்சியின் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் நேற்றுப் பேசும்போதே சுக்ளா இவ்வாறு தெரிவித்தார். மேலும் நான்கு அம்சங்கள் பற்றிப் பேசிய அமைச்சர், மீண்டும் இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்படமாட்டாது எனவும், இலங்கையின் அரசியலில் சீர்குலைவு ஏற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் மூன்று தமிழர்கள் அதிரடிப்படையால் சுட்டுகொலை

### 38பேர் கைது; விபரம் தெரியவில்லை

(யாழ்ப்பாணம்)

காரைதிவு, அம்பாறை ஆகிய பகுதிகளில் சிறிலங்காவின் விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்து கைது செய்த மூன்று அப்பாவிப் பொதுமக்களை அவ்விடத்திலேயே சுட்டுக் கொன்றனர்.

கடந்த பதினோராம் திகதி காலை ஏழு மணியளவில் இந்த இரு பகுதிகளையும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திரு. சுபோத்கான் சகாய் தமிழ்நாடு விஜயம்

(சென்னை)

பிரதமர் சந்திரசேகரின் அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக விளங்கும் திரு. சுபோத்கான் சகாய் இன்று சென்னைக்கு விஜயம் மேற்கொள்ள இருக்கின்றார். தமிழகத்தின் சட்டம், ஒழுங்கு நிலை பற்றி எதிர்க்கட்சிகள் தெரிவிக்கும் கண்டனங்கள் குறித்து மாநில அரசின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### நினைவு நாளும் வெற்றி நாளும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 22 ஆம் திகதியை கரும்புலி லெப். கேணல் போர்க்கின் நினைவு நாளாகவும், மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பு வெற்றி நாளாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் பிரகடனப்படுத்தியுள்ளார்கள்.

## தோப்பூர் ஊர்காவற்படையால் இரு தமிழர் வெட்டிக் கொலை

(தோப்பூர்)

திருமலை மாவட்டத்தில் தோப்பூர் முஸ்லிம் ஊர்காவற் படையினர் கடந்த வெள்ளிக்கிழமை இரண்டு தமிழர்களை வெட்டிக் கொலைசெய்தனர். உப்பூறலைச் சேர்ந்தவர்களே இவ்வாறு வெட்டிக் கொல்லப் பட்டவர்கள் ஆவர்.

க. விஜயசிங்கம் (வயது 40) தம்பிராசா (வயது 24) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். (மு)

## இந்திய சார்பு ‘போராளிகளை’ கருணாநிதி கைது செய்கிறார்

### ஈழ தேசிய ஜனநாயக முன்னணி குற்றச்சாட்டு

(சென்னை)

இந்திய அரசாங்கத்திற்கு எதிரான போராளிகளைக் கைது செய்யாமல் இந்தியாவிற்குச் சார்பான போராளிகளை தமிழக முதல்வர் மு. கருணாநிதி வேண்டுமென்றே கைது செய்கிறார் என ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி குற்றஞ் சாட்டியுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சீனப் பிரதமர் இன்று வருகை

சீனப் பிரதமர் லீ-பெங் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று சிறிலங்கா வரவுள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் கைவிட்ட புல்டோசரை

## மீட்பதற்குச் சென்ற அதிகாரியும் இரு இராணுவத்தினரும் பலி

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் கும்புறுப்பிட்டி பகுதியில் விடுதலைப்புலிகளால் கைவிடப்பட்ட புல்டோசர்வாகனம் ஒன்றை சோதனைவிடச் சென்ற சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவரும், வேறு இரு இராணுவத்தினருமாக மூவர் உயிரிழந்துள்ளனர். மேலும் நான்கு இராணுவத்தினர்காயமடைந்துள்ளனர் எனப் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சிச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளைஇறக்கக்கண்டிப் பகுதியில் வெளியேறிய இராணுவத்தினரில் ஒருவர் புலிகளின் மிதிவெடியில் சிக்கிக் காலை இழந்தார்.

## இலங்கைத் தமிழ் அகதிகள் மீது கெடுபிடிகள் இருக்கக் கூடாது

### - திருநாவுக்கரசு

(சென்னை)

இலங்கையில் இருந்து வரும் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டிற்கு மட்டுமே பாதுகாப்புத் தேடி வரலாம். ஆகவே தமிழ் நாட்டில் கெடுபிடிகள் இருக்கக் கூடாது என ஜெயலலிதா அணியிலிருந்துபிரிந்த அனைத்திந்திய அண்ணா திராவிட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வேலணையில் குண்டு வீச்சு; தாய், மகள் உட்பட 4பேர் பலி

(வேலணை)

சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் நேற்று நண்பகல் வேலணைச் சந்தியில் நடாத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் தாயும், பிள்ளையும் உட்பட நால்வர் கொலையுண்டனர்.

சிறிலங்கா விமானப்படை விமானங்கள் இரண்டு வேலணைப் பகுதியில் நேற்று அகோரக் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பம்பாய் விமான நிலையத்தில்

## 15,500 தோட்டாக்களுடன் இலங்கைத் தமிழர் கைது!

(பம்பாய்)

பாரிசிலிருந்து பம்பாய் திரும்பிய பயணி ஒருவரின் பெட்டியிலிருந்து 15, 500 தோட்டாக்கள் மீட்கப்பட்டன. இப் பயணி இலங்கைத் தமிழர் என பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. இளங்கோ நடராசா (வயது

(4ஆம் பக்கம் பார்க்க)

## வளலாயிலும் குண்டுவீச்சு; இருவர் காயம், வீடுகள் சேதம்

வளலாயில் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சுத்தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் சேதமுற்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

நத்தார், புதுவருட காட் வகைகள் அனைத்தும் விற் பனையாகிக்கொண்டு இருக் கின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். உங்கள் தெரிவுக்குமுந்துங்கள்: அனைத்தும் புதிய டிசைன்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை மின்சார நிலைய வீதி. யாழ்ப் பாணம்; நல்லூர், யாழ்ப் பாணம். (B-1718)

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிக ளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல. 256A பருத்தித்துறை வீதி, நல்லூர். "அரஸ்ஜவுளியகம்" 146 நவீன சந்தை, யாழ்ப்பா ணம். (R/888)

**சேவை**

தமிழ், ஆங்கில தட்டச்சு, றோணியோ வேலைகள். தமிழ், ஆங்கில தட்டச்சு பயிற்சி வகுப்புக்கள் தமிழ், ஆங்கில, சிங்கள மொழி பெயர்ப்பு, வாசகப் பிரியர் களுக்கு வாடகைப் புத்தகங் கள். அழகுக்கு உயிரூட்டும் தலைச் சோடனை, நீதினி "கபிரியேல் பில்டிங்" பஸ் நிலையம் முன்பாக சுன்னா கம். (B-1728)

## ரதிவோச் வேக்ஸ்

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்:- எமது ஸ்தாபனம் இல. 44, 46, கஸ்தூரியார் வீதியில்மீண்டும் 1-12-90முதல் இயங்கி வருகின்றது தவிர, இல.12, பொன்னையா லேன், ஆறுகால்மடம் ஆனைக்கோட் டையிலும் தொடர்ந்தும் இயங்கிவரும் என்பதையும் எமது வாடிக்கையாளருக்கும், சகல மணிக்கூடு பாவனையா ளருக்கும் மகிழ்ச்சியுடன் அறி யத்தருகின்றோம் (50 வருட கால நம்பிக்கைச் சின்னம் ரதி வோச் வேக்ஸ்) - நிர்வாகம். (B-1648)


## தவறிவிட்டது

சுப்பிரமணியதேசிகர் பால சுப்பிரமணிய தேசிகர் என்ப வரின் அடையாள அட்டை இல. 261880722V, மணி பர்ஸ், பணம், சில பொருட் கள் அடங்கியவை மீசாலைக் கும், நுணாவிலுக்கும் இடை யில் (மெயின் வீதி) தவறிவிட் டது. கண்டெடுத்தவர் கீழுள்ள முகவரியில் ஒப் படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். ஆ. சுப்பிரமணி யம், ஆசிரியர் வெள்ளை மாவ டிப்பிள்ளையார் கோயில், மீசாலை. (R/932)

# தாய், சேய் நலன் பாதிப்பு; தடுக்க வழிவகை ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் சிறி லங்கா அரசின் இராணுவ நட வடிக்கை, பொருளாதாரத் தடை போன்றவற்றால் தாய், சேய் நலனில் ஏற்பட்ட பாதிப்பு, இவ்வாறான பாதிப் புகளைத் தடுப்பதற்குரிய வழிவகைகள் பற்றி யாழ். பல் கலைக்கழக மருத்துவபீடமும் பிராந்திய சுகாதார நிலைய மும் இணைந்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டு வருகிறது. (க)


## குத்தகை விளம்பரம்

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை

**கேள்வி அறிவித்தல் — 1991**

எமது 24- 11- 90 ஆம் திகதியிடப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிக்கப்பட்ட குத்தகைகளுக்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 21 - 12 - 90 நண்பகல் 12 - 00 மணி வரையும், கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி 20-12-90 ஆம் திகதி நண்பகல் 12 - 00 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது. ஏனைய விபரங்களை இவ் வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

வே. வீரபத்திரபிள்ளை
விசேட ஆணையாளர்
வலி-தெற்கு பிரதேச சபை

வலி - தெற்கு பிரதேச சபை
சுன்னாகம் 13 . 12 . 90 (B - 1727)

## இடமாற்ற அறிவித்தல்

வி. மூ. பேரம்பலம் அன் கம்பனி (பட்டயக் கணக் காளர்கள்) 14.12.90 முதல் கீழ்க்காணும் முகவரியில் இயங்கி வருகின்றதென்பதையும் நாட்டு நிலைமை சீராகும் வரை சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில்காலை9-00மணி முதல்மாலை 1-00மணிவரை காரியாலயக் கடமைகள் நடைபெறும் என்பதையும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

36/1, 3 ஆம் ஒழுங்கை
(சாமி அன்கோவிற்கு அருகாமை)
மின்சாரநிலைய வீதி, முகாமையாளர்
யாழ்ப்பாணம். வி. மூ. பேரம்பலம் அன் கோ.

(R/938)

## பேட்டோஸ்ராற்

மீண்டும் யாழ்நகரில் தரமான போட்டோஸ்ரற் றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். காலை 9 . 00 மணி முதல் மாலை 4 . 00 மணி வரை.

**"ஸ்கைலைன்ஸ்"**

281 B, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்,

★ 'SKYLINES' ★

281 B, Clock Tower Road. Jaffna.
(ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை)

(B-1735)


## நயினாதிவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில்
## வழிபடுநர் சபை - 1991

மேற்படி கோயிலுக்கு 1991 ஆம் ஆண்டிற்கான வழிபடுநர்சபை உறுப்பினர்களாகச் சேர விரும்பும் அல்லது அங்கத்துவத்தைப் புதுப்பிக்க விரும்பும் கீழ்க்காணும் தகைமை உள்ள சகல வழிபடுநரும் தமக்குரிய வருடாந்த அங்கத்துவப் பணத்தை "பொருளா ளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு" என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்றுக் கீழே காணப் படும் படிவங்களில் தமக்கு ஏற்புடையதான படிவத்தில் அமைந்த விண்ணப்பங்களுடன் சேர்த்து 1990 ஆம் ஆண்டு மார்கழி மாதம் முப்பத்தோராந் (31) திகதி மாலை ஐந்து மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாக "செயலாளர், ஸ்ரீநாகபூஷணிஅம்மன்கோயில், நயினா தீவு" என்ற முகவரியிட்டு கடிதமூலம் அனுப்புமாறும் அல்லது கோயில் அறங்காவலர் சபைக் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடுமாறும் கேட் டுக் கொள்ளப்படுகிறீர்கள். விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழிபடுநர் சபை உறுப்புரிமை விண்ணப்பம்" என குறிக்கப்படல் வேண்டும்.

வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கான தகைமைகள்:-

1. (அ) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசித் திகதியில் 21 வயதிற்கு மேற் பட்டவராகவும்,
   (ஆ) இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும்,
   (இ) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநராகவும்,
   (ஈ) இலங்கைக்குடியரசில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்கும்ஒருவரே அங்கத்த வராக இருக்கத் தகுதியுடையவர். ஆனால் அப்படிப்பட்ட ஒருவர்
2. (அ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் தினம் நடைபெறும் நான்கு கால நித் திய பூசை ஒன்றில் உபயகாரராக இருப்பாராயின் அல்லது,
   (ஆ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் வருடாந்த மகோற்சவத் திருவிழாக்கள் உட்பட எந்தவொரு விசேட நைமித்திய உற்சவ பூசை ஒன்றின் உபயகார ராக இருப்பாராயின் அப்படிப்பட்ட ஒருவரும், மேற்கூறிய நித்திய விசேட நைமித்திய பூசைகள், திருவிழாக்கள் மகோற்சவம் ஒன்றை, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பத்தினராலோ அல்லது வழிபடுநரின் பிரிவின ராலோ, வகுப்பினராலோ செய்யப்படின் உறுப்புரை 2 (அ) அல்லது (ஆ) கூற்றின்படி அக்குடும்பமோ அல்லது அவ்வகுப்பினரோ தத்தமக்குள் வயது வந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவரை வழிபடுநரின்சபைக்கு அங்கத்தவ ராக விண்ணப்பிக்கும் ஒருவர் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா பத்து(10/-) செலுத்தலாம். தகைமையற்றவர்கள் மேற் கூறிய உறுப்புரை (அ) அல்லது (ஆ) வின்படி
   (இ) தனது விண்ணப்பப்படிவத்துடன் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா ஐம்பது (50/-) 'பொருளாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினா தீவு' என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்று அனுப்பப்படுதல் வேண்டும்.
3. அத்துடன் எப்பொழுதாவது ஒழுக்கக்கேடு சம்பந்தமான குற்றத்திற்காக எந்த ஒரு நீதிமன்றத்திலும் தண்டிக்கப்படாதவராகவும்,
4. இக்கோயிலின் ஊழியராக அல்லது மதகுருவாக இருந்து வேதனங்கள் அல்லது கொடுப்பனவுகளைப் பெறாத ஒருவராகவும்,
5. இக்கோயிலில் இலாபகரமான எவ்வித வேலைகளுக்குமான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளாதவராகவும் இருத்தல் வேண்டும்.
6. குறிப்பு:- விண்ணப்பதாரரின் கையொப்பம் ஒரு சமாதான நீதவான், இந்து மத குரு, இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர், கிராம சேவை உத்தி யோகத்தர் அல்லது அரசாங்கப் பாடசாலை அதிபர் மூலம் அத்தாட் சிப்படுத்தப்பட வேண்டும், உறுதிப்படுத்துபவரின் றப்பர் முத்திரை மிக முக்கியம்.

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், ஆ. தியாகராசா,
நயினாதீவு, செயலாளர்,
12-12-90. அறங்காவலர் சபை.

7. 2/- ரூபா செலுத்திக் கோயில் காரியாலயத்தில் உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

(B-1724)

## 91ஆம் நாள் நினைவஞ்சலி

அந்தியேட்டி அழைப்பும்
வீட்டுக்கிருத்தியமும், நன்றி நவிலலும்.

பிறப்பு 03 - 02 - 1969



அழிப்பு 18 - 09 - 1990

(மயிலிட்டி)

### சிவசுப்பிரமணியம் மகேந்திரதாஸ்

(சோதி)

(வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன்)

திதி: 17-12-1990 (திங்கட்கிழமை)

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீ ரென மறைந்துவிட்ட எமது அன்புச் செல்வத்தின் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று 17-12-1990 காலை நடைபெறுகிறதென்பதை அறியத் தருகிறோம்.

19-09-1990 அன்று வடக்கு அராலியில் நடந்த அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டு உத விய வடக்கு அராலி மக்களுக்கும், மற்றும் அனை வருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையும் வண்ணம் பிரார்த்திக்கிறோம்.

வடக்கு அராலி. பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

(R. 937)


## ராஜா காமென்ற்ஸ்

ராஜா காமென்ற்ஸ் ஸ்தாபனத்தாரின் நம்பிக்கை திறன் கூடிய தரமான றெடிமேற் ஆடைத் தினுசுகள் இன்றைய நவநாகரிக முறைகளில்

❋ ஆடவர் ❋ நங்கையர் ❋ மழலைகள்

அனைவரின் தேவைக்குகந்த வகையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

(வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு)

விபரங்கட்கு:
யோகாஸ் புடவை மாளிகை, இல. 16, பெரியகடை.
குமார் புடவை மாளிகை, முத்திரைச் சந்தி, நல்லூர்.

(B-1655)

### சிந்தனைக்கு

சட்டங்கள் மிகவும் மென்மையாக இருந்தால்,
பெரும்பாலும், அவற்றிற்குக் கீழ்ப்படிவதில்லை.
சட்டங்கள் மிகவும் கடுமையாக இருந்தால்,
அவற்றைப் பெரும்பாலும், செயற்படுத்துவதில்லை.
— பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 17-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# அர்த்தமற்ற கைதுகள் ஆட்சியைக் காக்குமா?

தமிழ் நாட்டில் தமிழ்ப் போராளிகள் கைது தொடர்கின்றது. கடந்த மூன்று தினங்களாக இந்த நடவடிக்கையில் தமிழகப் பொலிஸார் முனைப்பாக ஈடுபட்டுள்ளனர். இந்தக் கைது நடவடிக்கைகள் ஆஸ்பத்திரிகள் தொடக்கம் ஹோட்டல்கள், வீடுகள் வரை நடைபெறுகின்றன. இந்தக் கைதின்போது காயங்களுடன் இருந்த பல போராளிகளும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

தமிழகப் பொலிஸாரின் இந்த நடவடிக்கையில் இருந்து டில்லிக்கு சென்னை பணிந்துவிட்டது என்றே கூறலாம். அதாவது தனது ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காக சந்திரசேகரின் மிரட்டலுக்கு கருணாநிதி பணிந்துவிட்டார் என்று தெரிகின்றது.

சந்திரசேகரின் மிரட்டலுக்கு கருணாநிதி உள்ளாகியுள்ளார் என்பதனை சந்திரசேகரின் பேச்சுக்களும் அவரின் அமைச்சரவைச் சகாக்களின் பேச்சுக்களுமே தெளிவாக உணர்த்துகின்றன. நேற்று முன்தினம் லக்னோவில் கட்சித் தொண்டர்கள் இடையே பேசிய பிரதமர் சந்திரசேகர் முக்கிய தேசிய பிரச்சினைகளுக்கு மத்திய அரசின் ஆலோசனைக்கு ஏற்பவே தமிழ்நாட்டு அரசாங்கம் செயற்பட வேண்டும் என்றும், சென்னையில் இருந்து மத்திய அரசிற்குக் கட்டளைகள் அனுப்பட்ட காலம் முடிந்துவிட்டது எனவும் தமிழ்நாட்டுஅரசாங்கத்தை எச்சரித்துள்ளார்.

அதேவேளை, மத்திய அரசாங்கத்தின் மிரட்டலுக்கு பணிந்து தான் செயற்படுவதை முதல்வர் கருணாநிதியும் வெளிப்படுத்தியுள்ளார்: போராளிகள் கைது தொடர்பாக கருத்து வெளியிட்ட முதல்வர் கருணாநிதி, மத்திய அரசின் ஆலோசனைப்படியே இந்தக் கைதுகள் இடம் பெறுவதாகத் தெரிவித்துள்ளார். அதேவேளை, கைது செய்யப்பட்டவர்கள் கௌரவமாக நடத்தப்படுகின்றார்கள் என்ற ஒரு நிலையைத் தோற்றுவிக்க, கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் விடுதிகளிலும், பயணிகள் விடுதிகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள், பொலிஸ் விடுதியில் என்றால் என்ன ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்களில் என்றால் என்ன காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதே உண்மை இரும்புக்கம்பிகளாலான சிறைச்சாலை என்றால் என்ன? தங்கக் கம்பிகளாலான சிறைச்சாலை என்றால் என்ன? சிறை சிறைதான்.

தமிழக முதல்வரின் இந்த நடவடிக்கை அவரது கடந்த காலப் பேச்சிற்கும், நடவடிக்கைக்கும் முரண்பாடானதாகும். இலங்கையில் இருந்துவரும் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பது தமது கடமையென்றும், காயமடைந்துவரும் போராளிகளுக்கு மருத்துவ வசதி அளிப்பது தார்மீகம் என்றும் முதல்வர் கருணாநிதி பேசியதற்கும் இன்று ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காக நடந்து கொள்வதற்கும் இடையில் பெரும் வித்தியாசங்கள் உண்டு.

பொதுவாக சமஷ்டி ஆட்சி அமைப்பு முறை நிலவும் நாடுகளில் மத்திய அரசிற்கும், மாகாண மாநில அரசுகளுக்கும் இடையில் இவ்வாறான பிரச்சினைகள் வருவது இயல்பானதாக இருக்கின்ற போதிலும், அதிகாரப் பரவலாக்கல் மிகவும் குறைவாக உள்ள இந்தியா போன்ற சமஷ்டி அமைப்பு முறைகளில் மத்திய அரசாங்கங்கள் தாம் விரும்பியவாறு செயற்படக் கூடியதாக இருக்கின்றது. ஆகையினால் மாகாண அரசுகள் மத்திய அரசாங்கத்தைத் திருப்திப்படுத்துவதற்கான காரியங்களில் ஈடுபட்டுபிரயோசனம் ஏற்படப்போவதில்லை. அதற்கு மாறாக, தமது கொள்கைகள் மூலமும், திறம்பட்ட செயற்பாடுகள் மூலமும் மக்களை அணிதிரட்டி தமது அரசாங்கங்களைக் காத்துக் கொள்வதற்குப் போராட வேண்டுமே ஒழிய விட்டுக் கொடுப்பின் மூலம் வெற்றி பெற முடியாது.

இதனை மேற்கு வங்காள முதல்வர் ஜோதிபாசுவின் நடவடிக்கையே தெளிவாகக் காட்டுகின்றது. சந்திரசேகர் பிரதமராகப் பதவி ஏற்றதற்கோ, அரசாங்கம் அமைத்ததற்கோ, மேற்குவங்காள அரசாங்கமோ, முதல்வரோ ஒரு வாழ்த்துச் செய்திதானும் அனுப்பவில்லை. மாறாக இது மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் இல்லை என பத்திரிகைகளுக்கு செய்தி வெளியிட்டார். ஆனால் மத்திய அரசும் மேற்கு வங்காளத்தில் தனது அடாவடித்தனத்தை காட்ட முன்வரவில்லை. ஏனெனில் தனது கொள்கையுடன் மக்களைச் சந்திக்க மேற்குவங்காளத்தில் மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தயாராகவுள்ளது.

இதனைத் தமிழக முதல்வரும் உணருதல் நல்லது. அதைவிடுத்து மத்திய அரசை தாஜா செய்வதனால் விளையப் போகும் பயன் ஒன்றுமில்லை. இதனை முதல்வர் கருணாநிதிக்கு நாம் பெரியளவில் வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவ்வாறான அனுபவத்தைகடந்தகாலத்தில் அவரேபெற்றவர். 1975ஆம் ஆண்டு மிசாச்சட்டம் அமுலில் இருந்த போது தமது அரசாங்கத்தை காப்பதற்காக குட்டிமணி போன்றவர்களை கைது செய்து இலங்கைக்கு நாடுகடத்தினார். ஆனால் இவரது இந்த நடவடிக்கை இவரது அன்றைய அரசாங்கத்தைக் காப்பாற்றவில்லை.

விமர்சனம்

# "பூபாளம்"

# இம்மண்ணின் படைப்பு

எமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான இந்த போரிலே சிங்கள அரசு தமிழ்மக்களின் உரிமையையும் இறைமையையும் நசுக்கி எம்மின மக்களையும் அவர்களுடைய போராட்ட உணர்வுகளையும் நிர்மூலமாக்கி விடுவதில் முழுமூச்சுடன் செயற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் எமது மக்களை தாயகப்பற்றுடன்கூடிய போராட்ட உணர்வு ஒருமுகப்படுத்தப் பட்டு கூர்மைப்படுத்தப் பட்டாலன்றி எமது சுயநிர்ணய உரிமையை பெற்றுக் கொள்ளும் இந்த போரை வென்றெடுப்பதில் பெரும் உணர்வுரீதியான சிக்கல்களை எதிர்நோக்கவேண்டி ஏற்படும்.

இந்த சிக்கல்களை எதிர்நோக்கி சிங்கள அரசின் திட்டமிட்ட சதிகளை நிர்மூலமாக்குவதில் அண்மையில் நிதர்சனம் அலுவலகத்தில் வெளியிடப்பட்ட ''பூபாளம்'' பாடற் பதிவுநாடா பெருவெற்றி கண்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

மேஜர் காந்தரூபன், கப்ரன் கொலின்ஸ், கப்ரன் வினோத் ஆகிய கடற்புலிகளான கரும்புலிகளின் நினைவாக வெளியிடப்பட்ட இந்த எழுச்சி மிக்க பாடல்களைக் கொண்ட நாடா நிதர்சனம் வெளியீடு செய்த பாடல் வரிசையில் தமிழீழ மக்கள் மத்தியில் வெகுவாக பிரபல்யமாகி வருகிறது.

இவ்வெளியீட்டில் கருத்தாழம்மிக்க கவிதை நடையும் அதனைத்தொடர்ந்து அமைந்தபாடல்கள் ஒவ்வொன்றும்ஒவ்வொரு உணர்வுகளை வெளிப்படுத்தகின்றன. ஈழத்தில் உள்ள ஒவ்வொரு தமிழ் மகனையும் போராட்டத்திற்கு அறைகூவி அழைப்பதுபோல அமைந்திருக்கும் ''பெற்றதாயின் மானம்காக்க புறப்படுமகனே'' என்றமுதலாவது பாடல் இனிய இசை அமைப்புடன் அமைவதுடன் தமிழன்னை வாழ்த்துடன் ஆரம்பிப்பது போன்ற ஒரு உணர்வை கொண்டுவரும் என்பதில் ஐயமேதுமில்லை.

தொடர்ந்த பாடல்களான 'மக்கள் சக்தி வெல்லும்' என்று ஆரம்பிக்கும் பாடலும் 'செந்தமிழ் ஈழம் எமதென்னும் போதிலே' என்ற ஒரு தமிழ் மகனின் மனோநிலை பற்றிய பாடலும் திரும்பத் திரும்ப ஒரு முறை கேட்டவரின் வாயிலே வந்து செல்லும்.

லோகன்

எமது தமிழின விடுதலைப் போராட்டத்தில் ஒரு பகுதி இளைஞர்கள் மண்ணின் மீது கொண்ட அளவற்ற பாசத்தால் வீறு கொண்டெழுந்து போராடும் அதேவேளை ஒரு சிலர் தாம்தப்பினால் போதும் என்று உயிருக்கு அஞ்சி வாழ நினைப்பதை எடுத்துச்சொல்லும் வகையில் அமைந்திருக்கும் 'இராவணன் ஆண்டால் எனக்கென்னடா!' என்ற பாடல் ஒவ்வொருவருடைய சிந்தையையும் கவரக்கூடியதாக உள்ளதுடன் மிக எளிமையான இசை அமைப்பும் கொண்ட ஒரு கர்நாடக சங்கீதப் பாடலாகும். இது நிச்சயம் இந்த வெளியீட்டில் முதலிடத்தைப் பிடிக்கும். தொடர்ந்து 'மாணிக்கத் தேரினை மண்டியிட்டாலும் காணிக்கையாகவே தந்தாலும் மாணிக்க மண்ணைத் தருவோமா?' என்ற ஐந்தாவது பாடல் மண்ணின் பெருமையை எடுத்துச் சொல்வதாய் உள்ளது.

மேலும் 'கரடு முரடு பாதைகளை கடந்து வந்தோம்', 'கண்மணி ராஜா நில்லு என் கேள்விக்கு பதிலென்ன சொல்லு', 'ரத்தத்திலே சிவந்த மண்ணே முத்தம் கொடுத்தேன் வா' போன்ற பாடல்கள் போராட்ட சூழலுக்கு ஏற்றவாறு அமைந்திருக்கின்றன தாள நயமும் சுருதி லயமும் இப்பாடல்களுடன் இணைந்து போவது மனதை கொள்ளை கொள்வதாக உள்ளது.

இறுதியாக பாடல் வரிசையில் 'இந்த ஆண்டில் இன்றேல் எதிர்வரும் ஆண்டில் இருக்க மாட்டார் எங்கள் தோழர்கள் கூண்டில்' என்ற பாடல் சுதந்திரமான சுயநிர்ணய உரிமையை விரைவில் பெற்றுக் கொள்ளப்போவதை கட்டியம் கூறுவது போல் அமைந்துள்ளது.

இவை தவிர ஒவ்வொரு பாடல்களும் ஆரம்பிக்கும் முன்னர் அந்தப் பாடல் பற்றிய விளக்க உரை மிகவும் சாந்தமான குரலாக அமைந்திருப்பதும் பாடலை தெளிவு படுத்துவதாக அமைந்திருப்பதும் தயாரிப்பாளர்களது திறமையை எடுத்துச் சொல்வதாக உள்ளது.

இத்தகைய சிறந்த பாடல்களை இயற்றி அதற்கு எமது மண்ணின் மைந்தர்களை கொண்டே இசை அமைத்து அதனுடன் பாடகர்களின் குரலூடாக தேவகானமாக்கப்பட்ட பூபாளத்திற்கு வெறும் அறுபது ரூபா மட்டும் பெறுமதி இட்டிருப்பது மிகக் குறைவான தொன்றாகும்.

அகதிகளுக்குரிய பொருள்களை

# உயிர்த்தியாகம் செய்தேனும் அவாகளிடம் ஒப்படைப்போம்

(வண்ணார்பண்ணை) - ஆஞ்சநேயர்

தென்தமிழீழ மக்களின் துயர்துடைப்பதற்காக உங்களிடம் சேர்க்கப்படும் பொருள்கள் அனைத்தையும் உயிர்த்தியாகம் செய்தாயினும் அவர்களிடம் ஒப்படைப்போம். அவர்கள, வட தமிழீழத்தில் வாழ்கின்ற உடன்பிறப்புக்களான உங்களின் உதவிகளை எதிர்பார்க்கின்றனர். இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரசாரப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் நேற்றுமுன்தினம் வண்ணார்பண்ணை ஐயனார் சனசமூக நிலைய முன்றலில். தென்தமிழீழ மக்களின் துயர்துடைப்பதற்கான கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தென்தமிழீழ மக்கள் இன்று காடுகளிலும், அகதி முகாம்களிலும் சொல்லொணாத் துயரத்தின் மத்தியில் வாழ்கின்றார்கள். சிறிலங்கா அரசின் திட்டமிட்ட செயல்களினால் உணவின்றி இலைகுழைகளை உண்டு மரணத்தின் பிடியில் தவிக்கின்றார்கள். என்றார்.

# தெல்லிப்பளையில் நிவாரணம் சனிமுதல் இடை நிறுத்தம்

மார்கழி மாதத்திற்காக வழங்கப்பட்ட இலவச உலர் உணவு விநியோகம் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபரின் பணிப்பின் பேரில் நேற்று முன்தினம் முதல்இடை நிறுத்தப் பட்டது.

மார்கழி மாதத்திற்கு 42, 41, 40, 39ஆம் இலக்க இலவச உலர் உணவு வழங்கப் பட வேண்டும் என முன்னர் உதவி அரச அதிபரினால் சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தினால் 42ஆம், 41ஆம் இலக்கங்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் திடீரென உதவிஅரசாங்க அதிபரினால்41 ஆம், 40ஆம், 39ஆம் இலக்கங்களுக்கான நிவாரணம் வழங்குவதை மறுஅறிவித்தல்வரை நிறுத்திவைக்கும்படி அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தெல்லிப்பளை ப. நோ, கூ. சங்கத்தினால் எதிர்வரும் 19ஆம் திகதி வழங்கப்படவிருந்த 40ஆம் இலக்க நிவாரணமும், 26ஆம் திகதி வழங்கப்படவிருந்த 39ஆம் இலக்க நிவாரணமும் மறு அறிவித்தல்வரை வழங்கப் படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணங்கள் தொடர்ந்து வழங்குவது பற்றி 28ஆம்திகதி நடைபெறவுள்ள மாவட்ட உலர் உணவு விநியோகம் சம்பந்தமான கூட்டத்திலேயே தீர்மானிக்கப் படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### கூட்டம்

யாழ் பல்கலைக்கழக முதலாம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான வரவேற்புக் கூட்டம் இன்று திங்கட்கிழமை (17.12 90) பிற்பகல் 2.30 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. முதலாம், இரண்டாம் வருட கலைப்பீட மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இரண்டாம் வருட கலைப்பீட மாணவர்கள் அழைப்புவடுத்துள்ளனர்.

### காசோலைகள் அனுப்பப்பட்டன

புகையிரத ஊழியர்களுக்கான ஓகஸ்ட், செப்டம்பர், ஒக்டோபர் மாத ஒய்வூதியக் காசோலைகள் அவரவர் பகுதி வங்கிகளுக்கு அனுப்பப் பட்டு விட்டதாக யாழ். செயலக ஒய்வூதியக் கிளைக் கணக்காளர்நாயகம் தெரிவித்தார். ஜூன், ஜூலை மாத ஒய்வூதியப் பணம் யாழ். ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையில் வழங்கப்பட்டது தெரிந்ததே-

### சமூகம் தரவும்

(வடமராட்சி)

வடமராட்சிக் கோட்டத்தில் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவாகியுள்ள தொண்டர் ஆசிரியர்கள், வசதிகள், சேவைகள் கட்டண ஆசிரியர்கள் அனைவரையும்யாழ்/மெதடிஸ்த பெண்கள் பாடசாலைக்கு இன்று திங்கட்கிழமை காலை 9 00 மணிக்கு சமூகம் தரும்படி கோட்டக்கல்வி அதிகாரிதிரு.வீரபத்திரன்கேட்டுக் கொண்டுள்ளார். நேர்முகப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படுவற்கு ஏதுவாக ஒவ்வொருவரும் தத்தமது தேசிய அடையாள அட்டைகளைக்கொண்டுவரும் படி கேட்கப்பட்டுள்ளனர்.

# காஷ்மீர் மாநில தீவிரவாதிகளுக்கு இராணுவ ரீதியில் உதவ வேண்டாம்

## பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கோரிக்கை

(புதுடில்லி)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் இயங்கும் தீவிரவாதிகளுக்கு பிரதேச அல்லது இராணுவ ரீதியில் எந்தவகையிலும் உதவ வேண்டாம் என்று அமெரிக்கா பாகிஸ்தானைக் கோரியுள்ளது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது; அமெரிக்காவின் விசேட தூதுவர் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பகுதியின் ஆளுநருக்கு எழுதியுள்ள கடிதத்தில் காஷ்மீரில் கருத்துக் கணிப்புஎடுக்கும் வாக்கெடுப்பு நடத்தவேண்டியது அவசியம் இல்லைஎன்றும், சிம்லாஉடன் பாட்டின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடாத்த இந்தியாவும், பாகிஸ்தானும் முன்வரவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## ஜோர்ஜ் புஷ் - தாரிக் அசீஸ் சந்திப்பு ரத்துசெய்யப்பட்டது

(பாக்தாத்)

வாஷிங்டனில் இன்று நடைபெறுவதாக இருந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் - ஈராக்கிய வெளியுறவுத் துறை அமைச்சர் தாரிக் அசீஸ் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது.

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் உசைனை சந்திக்கஇருந்த ஜேம்ஸ் பேகரின் பயணம் பற்றிய திகதியில் ஏற்பட்ட குழப்பங்களே ஜோர்ஜ் புஷ்-தாரிக் அசீஸ் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டதற்கு காரணம் என ஈராக் கூறியுள்ளது.

முதலில் ஈராக் இந்த மாதம் 12ஆம் திகதியே பாக்தாத்தில் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் எனக் கேட்டிருந்தது. ஆனால் ஜேம்ஸ் பேகர் அடுத்த வருடம் ஜனவரி 3 ஆம் திகதிக்குப் பின்னரே பேச்சுக்கள் என்று கூறினார். இதன் பின்னர் சதாம் உசைன் ஜனவரி 12ஆம் திகதியே பேச்சுக்கள் நடத்தத் தாம் தயார் என்று தெரிவித்தார்;

இதனைத் தொடர்ந்தே வாஷிங்டனில் நடைபெற இருந்த சந்திப்பு ஈராக்கினால் ரத்துச்செய்யப்பட்டது.

இதேவேளை ஈராக்கிய ஜனாதிபதி சதாம் உசைன் ஈராக்கிய மக்களைப் போருக்கான ஆயத்தங்களைச் செய்யும்படி கோரியிருக்கிறார். பாதுகாப்பிற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படி அவர் மக்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

ஜனவரி 3ஆம் திகதிக்குப் பின்னரே பேச்சுக்கள் என அமெரிக்கா கூறியமையானது ஈராக்கிய மக்களைப் போருக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளாது தடுத்தல் என்பதேயாகும் என சதாம் உசைன் தெரிவித்துள்ளார்.

---

திரு சுபோத்கான்

தலைமைச் செயலருடன் பேச்சுவார்த்தை நடாத்துவார். மற்றும் இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கைகள் குறித்தும், அவர்களைக் கட்டுப்படுத்த தமிழக அரசு மேற்கொண்டுள்ள வழிகள் குறித்தும் இப்பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட உள்ளதாக தெரிகின்றது. திரு. சுபோத்கான்சகாய் மாநில முதல்வர் திரு. கருணாநிதியையும், ஆளுனர் சுர்ஜித்சிங் பர்னாலாவையும் சந்திக்க இருக்கின்றார்.

---

கிழக்கில்

பிள்ளை (வயது 25), தம்பி முத்துராசா (வயது 25) இருஷ்ணபிள்ளை அசோகன் (வயது 28) ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களில் இருஷ்ணபிள்ளை அசோகனும், தம்பிமுத்துராசாவும் திருமணமானவர்கள்; இருஷ்ணபிள்ளை அசோகன் இரு பிள்ளைகளின் தந்தையாவார். இவர்களை கைதுசெய்த ரெலோ குழுவினர் வாழைச்சேனை முகாமில் உள்ள சிங்கள இராணுவத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

---

இந்திய

நேற்று முன்தினம்தமிழ்நாட்டில் தமது உறுப்பினர்கள் 22 பேர் கைது செய்யப்பட்டது தொடர்பாக விடுத்துள்ளஅறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

எவ்வித காரணமும் இன்றி முதலில் 18 பேரைக் கைது செய்திருந்த தமிழ்நாடு அரசு இப்போது மீண்டும் 22 பேரை கைது செய்துள்ளது என்றும், இது பற்றித் தாம் இந்தியப் பிரதமருக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் ஆட்சேபத் தந்திகள் அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தது;

தமிழக அரசின் இந்த நடவடிக்கையானது இந்திய மத்திய அரசாங்கத்திற்கு ஆதரவாக செயல்படும் ஈழப் போராளிகளுக்கு எதிராக வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்றும் கூறியுள்ளது.

---

யாழ்- பாடசாலை

முப்பத்தைந்திற்கும் மேற்பட்ட பாடசாலைகள் பலத்த சேதமடைந்துள்ளதுடன் இவற்றின் சேதத்தொகை 50 கோடி ரூபாய்க்கு மேற்பட்டதெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

புரட்டாதி பதினைந்தாம் திகதிக்கு முன்னரே இந்தக் கணிப்பீடு நடத்தப்பட்டுள்ளது. தற்போது இந்தக் கணிப்பு மேலும் அதிகரித்துள்ளது. (மு)

## இந்து இளைஞன்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் 'இந்து இளைஞன்' பத்திரிகை ஒன்பதாவது வெளியீடு மார்கழி மாதச் சிறப்பிதழாக இன்று திங்கட்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு நல்லை ஆதீனத்தில் பேரவைத் தலைவர் திரு. வே. கெ. தனபாலன் தலைமையில் நல்லை ஆதீன முதல்வர் குருமகாசன்னிதானத்தின் ஆசியுரையுடன் வெளியிடப்பட உள்ளது (24)

---

15, 500 தோட்டாக்கள்

22) என்ற பெயரிலான போலிப் பாஸ்போட்டுடன் வந்த இவர் சமிக்ஞைகளைக் காட்டக்கூடிய இரண்டு கருவிகளையும், யுத்தத்தில் தப்பிப் பிழைக்கும் என்ற பெயரிலான துண்டுப் பிரசுரங்களையும் வைத்திருந்ததாகவும் பி.ரி.ஐ ஸ்தாபனம் தெரிவித்தது.

---

புதிய

படுத்தக்கூடிய எந்தச் செயலிலும் இந்தியா ஈடுபடாது எனவும், இலங்கைக்குள் வெளிநாட்டுச் சக்திகள் எதுவும் ஊடுருவல் செய்ய இந்தியா அனுமதிக்காது எனவும், பயங்கரவாதம், வன்செயல் நடவடிக்கைகளுக்கு இந்திய மண்ணைத் தளமாகப் பயன்படுத்த இந்தியா அனுமதிக்காது எனவும் தெரிவித்தார்.

---

இலங்கைத்

முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் திரு. திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

போராளிகள் தமிழ் நாட்டில் கைது செய்யப்படுவது தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கு அளித்துள்ள பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

போரிலே காயமடைந்துவரும் போராளிகளைக் கைது செய்தல் தவிர்க்கப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். எங்கோ யாரோ செய்யும் தவறுகளை ஒட்டி எல்லோரையும் பாதிக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்றும் தெரிவித்தார்.

இதே வேளை தமிழ் நாட்டில் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிப்பவர்களைக் கைது செய்தல், தண்டித்தல்வேண்டும் என்றும் கூறினார்.

இதே நேரத்தில் தமிழக அரசின் இத்தகைய நடவடிக்கைகள் மத்திய மாநில அரசுகளின் கூட்டு ஆலோசனையின் பின்னரே எடுக்கப்பட்டதாக தமிழக செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது என்றும்ஆனால் மத்தியமாநில அரசுகள் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து என்ன முடிவு எடுத்துள்ளார்கள் என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தின் போது போராளிகள் நடத்தப்பட்ட விதத்தைநினைவுகூர்ந்த அவர் அவரது நடவடிக்கைகளை அனைவரும் பின் பற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

## போபோர்ஸ் ஆவணங்களில் அதிகமாக ஒன்றும் இல்லையாம் -சந்திரசேகர்

(டில்லி)

சுவிஸ் அரசாங்கத்தினால் கடந்த 5ஆம்திகதி ஒப்படைக்கப்பட்ட போபோர்ஸ் பீரங்கி பற்றிய ஆவணங்கள் அதிகமாக எதையும் வெளியிடவில்லை என இந்தியப் பிரதமர் எஸ். சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் டில்லியில் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை இது பற்றிய புலன் விசாரணை நிறுத்தப்பட மாட்டாது என்றும், மக்களிடம் இருந்து இது பற்றிய விபரங்கள் ஒன்றும் மறைக்கப்பட மாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் பஞ்சாப் பற்றிய நிருபர் ஒருவரின் கேள்விக்கு பதில் அளிக்கையில் பஞ்சாப்பில் அடுத்த தடவை ஜனாதிபதி ஆட்சிமுறை கொண்டு வரக்கூடாது என்றும், அதற்கு முன்னதாக அங்கு தேர்தல் நடத்தப்படும் என்றும் தெரிவித்தார்,

## புளியங்கூடலிலும் குண்டுவீச்சு

ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்று விமானக் குண்டு வீச்சும், எறிகணைத் தாக்குதலும் இடம்பெற்றது. இதில் ஒருவர் பலியானார்.

பகல் 12. 30 மணியளவில் புளியங்கூடல் பகுதியில் குண்டு வீச்சு விமானங்கள் பாரிய குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. இந்தத் தாக்குதலில் சலூன்,லோன்றி உட்பட ஐந்துகடைகள் சேதமுற்றன. (14) (85)

## இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட வங்கி முகாமையாளர்களுக்கான கருத்தரங்கொன்று இன்று மாலை மூன்று மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது, இக் கருத்தரங்கில் சகல முகாமையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாதிரி நிர்வாகச் செயலகத்தினர் கேட்டுள்ளனர். (மு)

---

சினப்பிரதமர்

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றிலிருந்து புதன்கிழமை வரை கொழும்பு நகரில் குறிப்பிட்ட சில வீதிகளில் போக்குவரத்து நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

வளலாயிலும்

நேற்றுக்காலை அச்சுவேலி. வளலாய்ப் பகுதியில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் எஸ். சிவகணேசன் (13வயது), செல்வநாயகம் (43வயது) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (85) (லோ)

## கிளிநொச்சியில் விமானத்தாக்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி டிப்போச் சந்தியில் நேற்று முன்தினம்11 40 மணிக்கு ஹெலிக்கொப்ரர், பொம்மர் ஆகியன தாக்குதலில் ஈடுபட்டன. இத்தாக்குதலின்போது அவ்விடத்தில் இருந்த ரட்ணம் என்பவருக்குச் சொந்தமானபலசரக்குக்கடை ஒன்றும், மாவீரர் வளைவு ஒன்றும் சேதமடைந்தன.

---

அம்பாறை

நூற்றுக்கணக்கான எஸ். ரி. எவ்வினர் சுற்றிவளைத்தனர். இந்த சுற்றிவளைப்பில் நாற்பத்தொரு தமிழர்களை கைது செய்ததுடன் இவர்களில் இனங்காணப்பட்ட மூவரை ஸ்தலத்திலேயே சுட்டுக் கொன்றனர்.

இதனைத் தொடர்ந்து ஏனைய முப்பத்தெட்டுப் பேலரயும் துப்பாக்கி முனையில் காரைதீவு இராணுவ முகாமுக்குள்அழைத்துச்சென்றனர். இவர்களைப் பற்றிய விபரம் எதுவும் இன்னும் வெளிவரவில்லை. இந்த முப்பத்தெட்டுப் பேருடைய உறவினர், பெண்கள், குழந்தைகள் அம்பாறையில் பரிதவிக்க விடப்பட்ட நிலையில் உள்ளனர். (மு

---

வேலணையில்

இத்தாக்குதலில் தேவராசா பிருந்தா, இவரது தாயார் தேவராசா தனலட்சுமி ஆகியோரும் மேலும் மாணிக்கம் காண்டீபன் என்ற 13 வயது சிறுவனும் பலியாகினர். மேலும் குஞ்சரட்ணம் (வயது 40), இராசையா (வயது 68), துரைராசா (வயது 40), ராஜ்குமார் (வயது 30) ஆகியோர் காயமடைந்தனர். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பொருள்களை வாங்கிக்கொண்டு நின்றவர்களும், வீதியால் சென்றவர்களுமே கொல்லப்பட்டும், காயமடைந்தவர்களும் ஆவர்.

இதனைத் தொடர்ந்து ஒரு மணியளவில் ஊர்காவற்றுறை இராணுவ முகாமிலிருந்து வேலணைப் பகுதியை நோக்கி ஆட்லறி எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தாக்குதலில் இராசையா கார்த்திகா என்றசிறுமி பரிதாபமாக உயிரிழந்தாள். இவருடைய தந்தை இராசையா காயமடைந்த நிலையில் யாழ் வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் லட்சுமி என்ற 70 வயது மூதாட்டியும் இவர்களுடன் காயமடைந்தார்.

(மு), (85), (14), (லோ)


## மரண அறிவித்தல்

### திருமதி ஐயாத்தம்பி சின்னம்மா

வடவரணி ஊராரும் எழுதுமட்டுவாள் வாசியுமாகிய திருமதி ஐயாத்தம்பி சின்னம்மா ஞாயிற்றுக்கிழமை 16 - 12 - 90 அன்று காலமானார். அன்னார் ஐயாத்தம்பியின் அன்பு மனைவியும், லீலாவின் அன்புத் தாயாரும், அபிராமிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற சிதம்பரநாதன் ஆகியோரின் சகோதரியும், டேவிற் இராசையாவின் (கொழும்பு) மாமியும் ஆவார்; அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16 - 12 - 90 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எழுதுமட்டுவாள் இராமியையன் (தரவை) இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:

(R/940) மகள் லீலா



## மரண அறிவித்தல்

### திருமதி முருகேசு பூரணம்

காரைநகர் களபூமியைச்சேர்ந்த முருகேசு பூரணம் காலமானார். இவர் காலஞ் சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற சிவசம்பு (ஸ்ரீ முருகன் அரிசிஆலை, கிளிநொச்சி) வின் அன்புத் தாயாரும், கனகம்மாவின் அன்பு மாமியாரும், தர்மகுலசிங்கம், ஜெகதீஸ்வரி, புஸ்பராணி, யோகேஸ்வரன், கமலநாதன், ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (17-12-1990) திங்கட்கிழமை 3. 00 மணிக்கு 393/21 கோயில் வீதி நல்லூர் இல்லத்தில் இருந்து தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

393/21, கோயில் வீதி, நல்லூர்.

தகவல்

இ. கமலநாதன்

(R/941)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.